pathfinder Foundation

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் புதிய அரசாங்கத்தின் கொள்கை சவால்கள்



பாத்ஃபைண்டர் ஃபவுண்டேஷன்
கொழும்பு
ஆகஸ்ட் 2024

# கொள்கை சுருக்கத்திற்கான அறிமுகம் - இலங்கையில் பொருளாதார நெருக்கடி மற்றும் புதிய அரசாங்கத்திற்கான கொள்கை சவால்கள்

ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற ஆராய்ச்சி மற்றும் வாதிடும் சிந்தனைக் குழுவாக இருக்கும், பாத்ஃபைண்டர் பவுண்டேஷனானது தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சமகால பிரச்சினைகள் குறித்த கொள்கை விளக்கங்களைத் தொடர்ந்து தயாரித்து வருகின்றது. இது தவிர மேலும், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாகவே தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் கொள்கைப் பிரகடனங்களைத் தயாரிப்பது இவ்வமைப்பின் நடைமுறையாகும்.

இந்நிலையில், பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக உள்ளூர் நிபுணர்கள் குழுவுடன் கலந்தாலோசித்து "இலங்கையில் பொருளாதார நெருக்கடி: புதிய அரசாங்கத்திற்கான கொள்கை சவால்கள்" என்ற அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இவ்வறிக்கையின் அமைப்பானது மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன;

1. இவ்வறிக்கையானது பொருளாதார நெருக்கடியின் தோற்றம் மற்றும் மக்கள் தொகையில் அதன் தாக்கம் பற்றிய பகுப்பாய்வுடன் தொடங்குகின்றது.மேலும், இது பொருளாதார நெருக்கடியின் மூலக் காரணங்களைப் பற்றிய விரிவான பகுப்பாய்வை வழங்குகின்றது.

2. இதன் இரண்டாவது பகுதியானது "நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பரிந்துரைகளின் தொகுப்பை'' முன்வைக்கின்றது, இது சர்வதேச நாணய நிதியத் (IMF) திட்டத்தை செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

3. இதன் மூன்றாவது பகுதி, முன்னேற்றமானது நெருக்கடியின் மீட்சிக்கு அப்பாலும் நீடிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை என்பவற்றை அடைவது ஒரு நீண்ட செயன்முறையின் ஒரு படி மட்டுமே ஆகும்.ஏற்றுமதி நோக்குநிலையுடன் வர்த்தகத் துறையை வலுப்படுத்துதல், அரசுக்கு சொந்தமான நிறுவனச் (SOE) சீர்திருத்தங்களை செயல்படுத்துதல், விவசாய சீர்திருத்தங்களை முன்னேற்றுதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவித்தல் போன்ற பல பரிந்துரைகளை இவ்வறிக்கை வழங்குகின்றது.

இவ்வறிக்கையானது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் மற்றும் பொருளாதார முன்னேற்றமானது மீட்சிக்கு அப்பாலும் நீடிக்கும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அரசாங்கமானது தொலைநோக்கு பார்வையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிறைவுச் செய்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தொடர் வாடிக்கையாளராக இலங்கை இருப்பதை தவிர்க்க வேண்டும் என்பதையும் இவ்வறிக்கை வலியுறுத்துகின்றது.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் புதிய அரசாங்கத்தின் கொள்கை சவால்கள்

## அறிமுகம்

இந்த கொள்கை சுருக்கமானது புதிய அரசாங்கத்திற்கான சீர்திருத்தங்களின் முக்கிய பகுதிகளை சுட்டிக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைச் சமூகத்தின் அரசியல் அபிலாசைகள் எதுவாக இருந்தாலும், எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் தெரிவுசெய்யப்படும் புதிய அரசாங்கம் தொடர்ச்சியான கொள்கைச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நெருக்கடியிலிருந்து பொருளாதார மீட்சியின் தொடர்ச்சி உறுதி செய்யப்பட வேண்டும், மேலும் மற்றொரு நெருக்கடிக்கான சாத்தியம் தவிர்க்கப்பட வேண்டும். நிலையான வளர்ச்சிப் பாதையில் பொருளாதாரத்தை நிலைப்படுத்த தெளிவான பார்வை அவசியம் தேவை. பழைய முறையிலான வரிக் குறைப்புக்கள், அரசாங்கத் தொழில்வாய்ப்புகள், சம்பள உயர்வுகள் மற்றும் இலவசப் பொருள்கள் சேவைகளை வழங்கல் ஆகியவற்றுக்கான கொள்கை விருப்பங்கள் இப்போது முடிவடைந்துள்ளன, ஏனெனில் அரசாங்கத்தின் நிதி ஒழுக்கம் முன்னுரிமையாக உள்ளது. உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் வளர்ச்சியின் அடிப்படையிலான உயர் பொருளாதார முன்னேற்றத்துடன் மாத்திரமே இலங்கை மக்கள் உயர் வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் அபிவிருத்தி அடைந்த நாட்டில் வாழ்வதற்கான அவர்களின் எதிர்கால ஆசைகளை நிறைவேற்றுவதற்கும் வழி வகுக்கும்.

புதிய அரசாங்கத்தின் கொள்கை சவால்கள் என்பது கருத்தியல் விவாதமோ பேச்சு வார்த்தையோ அல்ல. மாறாக, அவை பொருளாதார மீட்சி மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கான சூழலை உருவாக்குவதற்கான நடைமுறை மற்றும் வலுவான சீர்திருத்த நிகழ்ச்சி நிரலைப் பற்றியவையாகும்.

## பொருளாதார நெருக்கடியின்: தோற்றம்

### மக்களின் “இரட்டைத்“ துயரம்,

கடந்த 75 ஆண்டுகளில் தாம் முன்னொருபோதும் அனுபவித்திராத பொருளாதார நெருக்கடியின் கடுமையான யதார்த்தத்தை இலங்கையர்கள் இப்போது உணர்ந்துள்ளனர். மக்கள் இரண்டு முனைகளில் நெருக்கடியால் பாதிக்கப்படுகின்றனர்: (அ) உள்நாட்டு நிரம்பல் பற்றாக்குறை, பணவீக்க விளைவுகள், பொருளாதார சுருக்கம் மற்றும் வருமானம் மற்றும் வேலை இழப்புகள் போன்ற திடீர் பொருளாதார சரிவின் பாதகமான விளைவுகளை அவர்கள் எதிர்கொண்டனர் (ஆ) நெருக்கடியின் நீடித்த சுமையை அவர்கள் தாங்க வேண்டும், இது நேரடி மற்றும் மறைமுக வரி அதிகரிப்பு, எரிபொருள் மற்றும் மின்சார விலை உயர்வு, பெயரளவு ஊதியங்களின் வீழ்ச்சி மற்றும் அரசாங்க செலவின வெட்டுக்கள் போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கான கொள்கைப் பதில்களின் சுமையை குறிக்கிறது. இவை அனைத்தின் ஒட்டுமொத்த விளைவாக, மக்களின் வாழ்க்கைத் தரம் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது, அதே சமயம் அவர்களின் வறுமை மற்றும் கடன்பாடுகள் வேகமாக அதிகரித்துள்ளன.

### இது மனிதனால் உருவாக்கப்பட்ட நெருக்கடி

நெருக்கடிகள் காலப்போக்கில் மெதுவாக உருவாகின்றன, ஆனால் வீழ்ச்சி திடீரென ஏற்படுகிறது. சுதந்திரத்திற்குப் பிந்தைய வரலாறு முழுவதும் பாராட்டத்தக்க பொருளாதார மற்றும் நலன்சார் தரநிலைகளைக் கொண்டிருந்த ஒரு நாடு, இப்போது பொருளாதார நெருக்கடியில் விழுந்து, பிழைப்பதற்கே போராடும் ஒரு துயரமான பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது ஏன் என்பது ஒரு பெரிய கேள்வியாக உள்ளது. இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களால் பல தசாப்தங்களாக செய்த ”கொள்கைப் பிழைகள்” அதன் பொருளாதாரத்தை வெளியக அதிர்ச்சிகளுக்கு பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலைக்கு


தள்ளிவிட்டுள்ளது என வாதிடப்படுகிறது. ”கோவிட்-அதிர்ச்சி என்பது நெருக்கடியின் தூண்டுதலே தவிர, காரணம் அல்ல”. 1977 மற்றும் 1989 வரை உருவான நாட்டின் கொள்கை சீர்திருத்த செயல்முறை, 1990களின் பிற்பகுதிக்குப் பின்னர் முன்னேற்றம் காணவில்லை. மாறாக, இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தோன்றிய கொள்கைச் சூழல், வர்த்தகம் அல்லாத மற்றும் ஏற்றுமதிக்கு எதிரான சார்பு நிலை கொண்ட உற்பத்தியால் வகைப்படுத்தப்பட்டது. முன்னர் செயல்படுத்தப்பட்ட கொள்கை சீர்திருத்த திட்டம் 2000 களின் முற்பகுதியில் இருந்து மாற்றப்பட்டது.

## வர்த்தகமல்லா உற்பத்தி நோக்கிய சாய்வு

உற்பத்தி செயல்பாடுகளில் சிலவற்றை “வர்த்தகமல்லாதவை“ என்று வகைப்படுத்துகிறார்கள், அவை எங்கு உற்பத்தியாகின்றனவோ, அங்கேயே வாங்கி உபயோகிக்கப்பட வேண்டும் எனவே அவை முக்கியமாக உள்நாட்டு சந்தைக்கு பயன்பட மட்டுமே இயன்றவை. 2000களின் ஆரம்பத்திலிருந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) வர்த்தக உற்பத்தியின் பங்களிப்பு குறைந்து வருகிறது (படம் 1). இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி அதிகமாக வர்த்தகமல்லா உற்பத்தித் துறைகளான கட்டுமானம், உட்கட்டமைப்பு திட்டங்கள், மின்சாரம் மற்றும் எரிசக்தி, பயன்பாடுகள், போக்குவரத்து, தொலைதொடர்பு, நிதி, பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி மற்றும் சுகாதாரத்தின்மீது சார்ந்து வந்தது. இந்த வர்த்தகமல்லாத் துறைகளுடன் ஒப்பிடும்போது, “வணிகத்துக்கேற்ற“ துறைகளான வேளாண்மை மற்றும் உற்பத்தித் துறையின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது.

பொது முதலீட்டை நுணுகி ஆய்வு செய்யும்போது, வர்த்தகமல்லாத் துறையின் விரிவாக்கத்தில் அரசு முக்கிய பங்கு வகித்துள்ளமை தெரியவருகிறது. வர்த்தகமல்லாத் துறையை மேம்படுத்த மற்றும் விரிவாக்க அரசாங்கம் வெளிநாட்டு மூலங்களில் பெரிதும் கடன் வாங்கியதால், வரவு செலவு திட்டப் பற்றாக்குறையும் மொத்த அரசு படுகடனும் அதிகரித்தது. மேலும், உலக வங்கி நடாத்திய ஒரு ஆய்வு யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் (2009-2014) காலப்பகுதிக்கான பொருளாதார வளர்ச்சி செயற்கையாகவும் வர்த்தகமல்லாத் துறைகளால் முன்கொண்டு செல்லப்பட்டதாகவும் இருந்தது என்பதைக் குறிப்பிடுகிறது, இதில் கட்டுமானம், போக்குவரத்து, உள்ளக வணிகம், வங்கிப் பரிவர்த்தனை மற்றும் காப்பீடு மற்றும் நில வர்த்தகம் ஆகியவை மொத்த வளர்ச்சியின் 50 சதவீதத்திற்கு பங்களித்துள்ளன.

**படம்1: வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி 2000-2022**



## மற்றொரு பக்கம்: ஏற்றுமதி எதிர்ப்பு சார்ந்த சவால்கள்

கடந்த 45 ஆண்டுகளாக "திறந்த" பொருளாதாரமாக இருந்தும், 2023 ஆம் ஆண்டுவரை இலங்கை 12 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களை மட்டுமே ஏற்றுமதி செய்துள்ளமை வியப்பிற்குரியதாகும். வர்த்தக தாராளமயமாக்கலின் ஆரம்ப காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஏற்றுமதிகளின் விரைவான விரிவாக்கம் மற்றும் அதன் ஏற்றுமதி உள்ளடக்கத்தில் மாற்றம் ஏற்பட்டனவாயினும், 1990 களின் பின்னர் வர்த்தக தாராளமயமாக்கலின் பிற்பகுதியில் அந்த ஏற்றுமதி வளர்ச்சி வேகத்தைத் தக்கவைக்க நாடு தவறிவிட்டது. ஒப்பீட்டு ரீதியில், இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சியானது, இலங்கையை விட மிகவும் தாமதமாக வர்த்தக தாராளமயமாக்கலைத் தொடங்கிய அண்டை நாடுகள் உட்பட, பிராந்தியத்தில் உள்ள அதன் பல நாடுகளை விட பின்தங்கிய நிலையிலுள்ளது (அட்டவணை 1). 2000 களுக்கு முந்திய காலப்பகுதியில் இலங்கையில் ஏற்றுமதி வளர்ச்சி வேகத்தில் ஏற்பட்ட மந்தநிலைக்கு முக்கியமான காரணமாக ஏற்றுமதிக்கு எதிரான கொள்கைச் சார்பு நிலையைக் கூறலாம் - இது அதிகரித்த பாதுகாப்புவாதம் மற்றும் வர்த்தகமல்லா உற்பத்தியில் தங்கியிருந்தமை ஆகியவற்றின் தவிர்க்க முடியாத விளைவு ஆகும்.

(அட்டவணை 1) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளில் வர்த்தக ஏற்றுமதி

(US$ பில்லியன்)

| | 1990 | 2000 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 2 | 6 | 55 | 56 |
| கம்போடியா | 0 | 1 | 22 | 23 |
| சீனா | 62 | 249 | 3594 | 3380 |
| இந்தியா | 18 | 42 | 453 | 4032 |
| தென்கொரியா | 65 | 172 | 684 | 6032 |
| மலேசியா | 29 | 98 | 352 | 3013 |
| மியான்மார | 0 | 2 | 17 | 14 |
| சிங்கப்பூர் | 53 | 138 | 516 | 476 |
| இலங்கை | 2 | 5 | 13 | 12 |
| தாய்லாந்து | 23 | 69 | 287 | 284 |
| வியட்நாம் | 2 | 14 | 371 | 354 |


ஆதாரம்: உலக வங்கி, உலக அபிவிருத்தி குறிகாட்டிகள்

## இரண்டு செயல்திறன் நிலைகள்

ஆசிய நாடுகளின் வளர்ச்சி செயல்திறனை "வர்த்தக விரிவாக்கம்" மற்றும் "நிதி விரிவாக்கம்" என இரண்டு நிலைகளில் காணலாம். சில நாடுகளில், அதிகரித்த ஏற்றுமதி முக்கிய வளர்ச்சி ஊக்கியாக மாறியிருக்கின்றது. இத்தகைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டமை, மேம்பட்ட வர்த்தக செயல்திறன் மற்றும் அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் சிறந்த நிர்வாகத்தை அடைய அவர்களுக்கு உதவுகிறது. இது கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வெற்றிகரமான ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரங்களின் கதையாகும். இதற்கு மாறாக, அதிகரித்த அரசாங்க செலவினம் வேறு சில நாடுகளில் வளர்ச்சிக்கு உந்துதலாகவும் மாறியுள்ளது, வர்த்தக விரிவாக்கத்தை விட நிதி விரிவாக்கத்தையே அவர்களின் வளர்ச்சி சார்ந்துள்ளது. வளர்ச்சி

என்பது ஒருபுறம் நிலைபேறுடையதாக மாறவில்லை, ஏனெனில் தொடர்ந்து அதிகரிக்கப்படும் அரசு செலவுகளை, பெரும்பாலும் கடன் மூலம் நிதிப்படுத்த வேண்டியுள்ளது. மறுபுறம், வளர்ச்சி “வர்த்தகமல்லாத்“ துறைகளின் விரிவாக்கத்தை நோக்கிய சார்புடையதாய் மாறி விட்டது, ஆனால் ஏற்றுமதி வளர்ச்சியின் மூலம் வளர்ச்சி பெறப்படவில்லை. தொடர்ந்து அதிகரிக்கும் அரசு செலவுகள் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை அதிகரித்தும், அரசுக் கடனை வளர்த்தும் கொண்டிருக்கின்றன. வர்த்தகமல்லாத் துறைகளின் விரிவாக்கம் மற்றும் ஏற்றுமதி எதிர்ப்பு கொள்கைகள் வர்த்தக பற்றாக்குறையை அதிகரிக்கின்றன.

**வர்த்தகம் செய்யக்கூடிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய வெளிநாட்டுக் கடன்**
**2000-2021 (%)**




## இலங்கையின் வெளிநாட்டுக் கடன் புதிர்: ரூபாய்களில் சம்பாதித்து டொலர்களில் செலுத்துவது

நாடுகள் வளர்ச்சிக்கு ஏற்றுமதியை ஊக்குவிக்காமல், வர்த்தகமல்லாத் துறைகளில் வளர்ச்சியை நம்பிய அரசின் முயற்சியின் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்கை உள்ளது. 2000 களிலிருந்து, தொடர்ந்து ஆட்சி மாற்றங்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி முக்கியமாக வர்த்தகமல்லாத் துறைகளில் அடிப்படையில் உருவாகியது.

எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே, இவ்வாறான கொள்கைகள் வரவு செலவு திட்டப் பற்றாக்குறையினதும் வர்த்தகப் பற்றாக்குறையினதும் விரிவாக்கத்துக்கு வழிவகுத்தன. இலங்கை கடந்த இரண்டு தசாப்தங்களில் தொடர்ந்து இந்த இரட்டை பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. சலுகை அடிப்படையில் வெளிநாட்டுக் கடன்கள் குறைவடைந்த நிலையில், இலங்கை 2007 இல் சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களை (ISB) வழங்குவதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களை நோக்கி திரும்பியது. 2007-2019 காலப்பகுதியில், இலங்கை 17.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை ISBகளிடம் இருந்து கடனாக பெற்றுள்ளது. அதனுடன் ஒப்பிடுகையில், நாடு 11.3 பில்லியன் அமெரிக்க டாலர்களை மட்டுமே வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் (FDIs) ஈர்க்க முடிந்துள்ளது, இக்கடன்கள் முதன்மையாக வர்த்தகம் அல்லாத துறையிலும் பாய்ந்தது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து மேலும் கடன்களை பெற்றுக் கொண்டு ஏற்கெனவே பெற்ற கடனை செலுத்த வேண்டிய கட்டப்பாடுகளை இலங்கை ஏற்கனவே எட்டியிருந்தது.

வர்த்தகம் அல்லாத துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மூலம் பெறப்படும் ரூபாய் வருமானம் வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டு கடன் கடப்பாடுகளை பூர்த்தி செய்ய உதவாததால், வெளிநாட்டு கடன் மீள்செலுத்துதல் பிரச்சினை தொடர்ந்து மிகவும் சிக்கலானதாக மாறியது. இதன் விளைவாக, அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் நீண்ட காலத்திற்கு ஆண்டுதோறும் மீண்டும் மீண்டும் வரும் நிதிப் பற்றாக்குறையுடன் கூடுதலாக வெளிக் கடன்களை முதிர்ச்சியடையச் செய்வதற்கு அதிக கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. ஏற்றுக்கொள்ள முடியாத இச்சூழ்நிலையானது, பாரிய நிதிப் பற்றாக்குறை மற்றும் சாதகமற்ற கடன் இயக்கவியலின் தீய வட்டத்திற்குள் நாட்டை மூழ்கடித்தது.

வெளிநாட்டு கடன்களை மீளசெலுத்துதல் தொடர்ந்து கடுமையானதாக மாறியது, ஏனெனில் வர்த்தகமல்லாத் துறைகளில் மேற்கொண்ட முதலீடுகள் மூலம் பெறப்பட்ட ரூபாய் வருமானங்கள் வெளிநாட்டு கடன்களை மீள்செலுத்த உதவவில்லை. இதனால் தொடர்ந்து மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், வெளிநாட்டு கடன் சேவைகளைச் செலுத்த மேலும் கடன்களைப் பெற வேண்டிய கட்டாயத்தை எதிர்கொண்டன, மேலும் வருடாந்த நிதி பற்றாக்குறைகளுடன் இணைந்து மீளவும் கடன்களை பெற வேண்டியதாயிற்று. இந்த நிலைமையில், பெரும் நிதி பற்றாக்குறைகளும் மற்றும் கடன் பொருளாதார முறைகளும் நாட்டை மோசமான சூழ்நிலைக்கு இட்டுச் சென்றது.

நாடு இதற்கு முன்னரும் பல முறை நெருக்கடி நிலையை நெருங்கிய போதிலும் அவற்றைக் கடந்து சென்றது. ஆனால், தொடர்ந்த வெளிநாட்டு அதிர்ச்சிகள் மற்றும் உள்நாட்டு கொள்கைக் பிழைகள் தற்போதைய பொருளாதார நெருக்கடியை தூண்டின.இருதரப்பு மற்றும் தனியார் வெளிநாட்டுக் கடனைச் செலுத்துவதை 2022 ஏப்ரல் 12 அன்று இலங்கை இடைநிறுத்தியது. இலங்கை கடன் மறுசீரமைப்புத் திட்டம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் மீட்புத் திட்டத்தை எதிர்பார்த்து,

## நெருக்கடியிலிருந்து மீளல்

இன்றைய இலங்கை எதிர்கொள்ளும் அதீத பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள, நாட்டிற்கு இரட்டைக் கொள்கை சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. முதலாவது, உடனடி பொருளாதார நிலைத்தன்மையை நோக்கிய சீர்திருத்தங்களை அமல்படுத்துவது, இதன் மூலம் கடன் நிலைத்தன்மையை உறுதி செய்தல். இந்த கொள்கை சீர்திருத்தங்கள், இலங்கை அரசாங்கம் IMF உடன் நுழைந்து 2023 மார்ச் 20 அன்று அங்கீகரிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) உடன்படிக்கையின்படி "நெருக்கடியில் இருந்து மீள்வதை" உறுதி செய்யும் நோக்கத்தில் உள்ளன. நீண்ட கால சீர்திருத்தங்களின் இரண்டாவது தொகுப்பு, பொருளாதாரத்தில் "வர்த்தகமல்லாத துறை உற்பத்தி சார்பு" மற்றும் "ஏற்றுமதி எதிர்ப்பு சார்பு" ஆகியவற்றை மாற்றியமைக்கும் உறுதியான கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் "மீட்புக்கு அப்பாற்பட்ட பொருளாதார முன்னேற்றத்தை" உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், இரண்டு அடுக்கு சீர்திருத்தங்களுக்கு இடையே பல தொடர்புகள் உள்ளன, ஏனெனில் அவை ஒன்றை ஒன்று வலுவூட்டுகின்றன. ஏற்றுமதி வளர்ச்சிக்கான தடைகளை நீக்கி, தனியார் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்குவதன் மூலம், நாட்டின் வளர்ச்சித் திறனைத் திறக்காமல், பொருளாதார நிலைத்தன்மையை நிலைநிறுத்த முடியாது.

### IMF ஒப்பந்தத்தின் ஐந்து முக்கிய தளங்கள்

IMF உடனான நுகுகு ஏற்பாட்டின் நோக்கம் "இலங்கையின் பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பது, ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான பொருளாதார தாக்கத்தை குறைப்பது, நிதித்துறை ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் நிர்வாக மற்றும் வளர்ச்சி திறனை வலுப்படுத்துதல்" ஆகும். இது ஐந்து முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டது: (i) வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு,

(ii) கடன் நிலைத்தன்மையை மீட்டெடுத்தல், (iii) விலை நிலைத்தன்மை மற்றும் வெளிநாட்டு இருப்புக்களை மீண்டும் உருவாக்குதல், (iv) நிதித் துறை ஸ்திரத்தன்மை மற்றும் (v) கட்டமைப்பு சீர்திருத்தங்கள்:

1. வரி அடிப்படையிலான பொது நிதி சீராக்கம் என்பது வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிர்வகிக்கக்கூடிய நிலைக்கு குறைத்து, கடனின் தேவைகளை குறைப்பது. அரசாங்கத்திற்கு நேரடி வரிகளுக்கான திறமையான வரி வசூல் முறை இல்லை, எனவே வரி வருவாய் பெரும்பாலும் மறைமுக வரிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரச நிதிச் சீராக்கத்தை மேலும் தகுதியான மானியங்களை வழங்கி, எரிபொருள் மற்றும் மின்சார விலைகளின் செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் ஊக்குவிக்க முடியும். எவ்வாறாயினும், அதிகரித்த வறுமை மற்றும் பாதிப்புகள் மீதான நெருக்கடியின் கடுமையான தாக்கத்தை கருத்தில் கொண்டு, இலங்கைக்கு இலக்கு மற்றும் காலவரையறையுடன் கூடிய சமூக பாதுகாப்பு வலைத் திட்டம் தேவை.

2. 2022 ஆம் ஆண்டின் முடிவில், இலங்கையின் பொது கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் (GDP) 128 சதவீதமாக அதிகரித்தது. அரசாங்கம் அதன் வரி வருவாய் மூலம் கடன் திருப்பிச் செலுத்தும் பொறுப்புகளை நிறைவேற்ற முடியாததால், இது நிலைத்தன்மையற்றதாக உள்ளது. மதிப்பீடுகளின்படி, பொது கடனை 2032 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் 95 சதவீதமாகக் குறைக்க வேண்டும். இந்த இலக்கை கடன் மறுசீரமைப்பின் மூலமாகவும், எதிர்கால கடன் பொறுப்புகளை பூர்த்தி செய்யும் திறனை நிதி ஒழுங்கமைப்பு மூலம் மேம்படுத்தியும் அடைய முடியும். மேலும், வெளிப்புறக் கடன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்த, 2022 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.4 சதவீதமான தற்போதைய கடன் சேவையை, 4.5 சதவீத வருடாந்த உச்சவரம்புக்கு குறைப்பதன் மூலமும், ஏற்றுமதி ஊக்குவிப்பின் மூலமும் வெளிநாட்டுச் செலுத்தும் திறனை மேம்படுத்த வேண்டும்.

3. 2022 இல் சராசரி பணவீக்கம் 46.6 சதவீதம் இருந்ததால், விலை நிலைத்தன்மையை மீண்டும் நிலைநாட்ட இலங்கைக்கு "பல்பக்க உத்தி" தேவைப்பட்டது. அதிக பணவீக்கம் மக்களின் மெய் வருமானத்தை அழித்துவிட்டது, இதனால் வறுமையும் பாதிப்பும் அதிகரித்துவிட்டன. 2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கீழே குறைந்துள்ள, வெறும் 1 மாத இறக்குமதிகளுக்குச் சமமான வெளிநாட்டுக் கையிருப்புக்களைக் கட்டியெழுப்புவதும் அவசியம். ஒரு நெகிழ்வான நாணயமாற்று வீதத்தைப் பேணுகின்ற அதேவேளை, வெளிநாடுகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் திறனை இலங்கை மேம்படுத்த வேண்டும்.

4. நிதி துறையின் நிலைத்தன்மையை வலுப்படுத்தி வங்கித் துறையின் அழுத்தத்தை அகற்றவும், ஆரோக்கியமான பணவியல் கொள்கை ஒழுங்கமைப்பை பராமரிக்கவும் வேண்டும். பொருளாதார நெருக்கடியால் நிதி துறையின் நிலைத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளது. அரசின் செலவின தேவைகளை பூர்த்தி செய்வதற்காக மத்திய வங்கி பணம் அச்சிடும் "மோசமான பழக்கத்தை" துறக்க வேண்டும் மற்றும் மத்தியவங்கி அதன் சுயாதீனத்தை உறுதி செய்ய வேண்டும்.

5. இறுதியாக, நாட்டின் வளர்ச்சி திறனை திறக்கவும், ஊழல் பாதிப்புகளைக் கையாளவும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். நடுத்தர கால திட்டமாக, வருமான உருவாக்கம் மற்றும் வேலை வாய்ப்பை மேம்படுத்தவும், நாட்டு நெருக்கடியின் பாதிப்பை தீர்க்கவும், அரசிற்கு அதிகப்படியான வரி வருவாய் மூலம் நிதி ஒழுங்கமைப்புக்கு ஆதரவளிக்கவும் வளர்ச்சி அவசியமாகும். அதே நேரத்தில், இலங்கையின் வளர்ச்சி திறன் ஊழல் பாதிப்பால் மறைக்கப்பட்டுள்ளது,

அட்டவணை 2: நிலைத்தன்மையின் குறிகாட்டிகளில் மாற்றம் 2023-24

| | குறிகாட்டி | காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| GDP வளர்ச்சி வீதம் (%) | 7.8 | Q1/2024 | Q3/2023 இலிருந்து நேர்க்கணியம் |
| வேலையின்மை வீதம் (%) | 4.5 | Q1/2024 | Q1/2023 இல்4.7% இருந்து வீழ்ச்சி |
| பணவீக்க வீதம்˙ (%) | 0.9 | Mar-24 | செப்-2022இல் 69.8% இருந்து வீழ்ச்சி |
| சராசரி முதன்மை கடன் விகிதம் (%) | 12,4 | End-23 | 2022 இறுதியில் 28.2% இருந்து வீழ்ச்சி |
| வெளிநாட்டு நாணயக் கையிருப்பு மாற்றம் (%) | -1.5 | End-23 | 2021 இறுதியில் 34.4% இலிருந்து வீழ்ச்சி |
| வரி வருவாய் (LKR பில்லியன்) | 2.7 | 2023 | 2022ல் இருந்து 55.4% அதிகரிப்பு |
| முதன்மை இருப்பு (மொ. உ.உ %) | 0.6 | 2023 | 2022 இல் -3.7% இலிருந்து அதிகரிப்பு |
| வரவு செலவு திட்டக் குறைநிலை(மொ.உ.உ்.%) | -8.3 | 2023 | 2022 இல் -10.2% இலிருந்து சரிவு |
| வெளிநாட்டுக் கடன் (US$ பில்லியன்) | 55.4 | Q1/2024 | Q4/2023 இலிருந்து 1.0% அதிகரிப்பு |
| உள்நாட்டு கடன் (LKR டிரில்லியன்) | 17.3 | Q1/2024 | Q4/2023 இலிருந்து 1.4% அதிகரிப்பு |
| வெளிநாட்டு கையிருப்பு (US$ பில்லியன்) | 5.4 | May-24 | 2022 இறுதியில் $1.9 பில்லியனில் இருந்து அதிகரிப்பு |

ஆதாரம்:மத்திய வங்கி தரவுகள

## பொருளாதாரத் திருப்பம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் (2022-2023), IMF உதவியுடன், அரசாங்கம் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொண்டதுடன் முக்கியமாக பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான புதிய கொள்கை நடவடிக்கைகளை செயல்படுத்தியுள்ளது. செயல்பாட்டு பலவீனங்கள் மற்றும் கட்டமைப்பு உறுதிப்பாட்டுகள் இருந்தாலும், இலங்கை முக்கிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது என்பதை சர்வதேச நாணய நிதியம் அதன் வருடாந்த மதிப்பீடுகளில் ஏற்றுக்கொண்டுள்ளது. உண்மையில், இலங்கை தனது நெருக்கடியான பொருளாதாரத்தை இரண்டு ஆண்டுகளுக்குள் திருப்பிவிட்டது, மேலும் அது மிக ஆழமான நெருக்கடிக்குள் செல்வதைத் தவிர்க்க முடிந்துள்ளது.

## நிலைத்தன்மையில் முன்னேற்றம், குறிப்பிடத்தக்கது

2023ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், தொடர்ந்து ஐந்து காலாண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார சுருக்கம் முடிவடைந்தது, அப்போது மெய் மொத்த உற்பத்தி வளர்ச்சி வீதம் எதிர்க்கணியத்தில் இருந்து நேர்க்கணியமாக மாறியது. 2022 செப்டம்பரில் 68.9 சதவீத உச்சத்தை அடைந்த பிறகு, பணவீக்க வீதம் குறையத் தொடங்கியதுடன் 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒற்றை இலக்கத்திற்கு வந்தது. இதற்கேற்ப, 2022ஆம் ஆண்டில் 30 சதவீதத்திற்கு கடுமையாக உயர்ந்த வட்டி வீதங்கள் 2024ஆம் ஆண்டின் இரண்டாவது பாதியில் 8.25-9.25 சதவீதங்கள் வரை குறைந்துவிட்டன. இதுவே இலங்கை மத்திய வங்கி அறிவித்த துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன் வசதியின் வீதம் (SLFR) ஆகும். வருவாய் அதிகரிப்புடன் 2023ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருவாய் 55 சதவீதத்தைக் கடந்து அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், மத்திய வங்கி தனது உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்புகளை தொடர்ந்து கட்டியெழுப்பியுள்ளது, இது மே 2024 இல் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது. 2024 இன் முதல் காலாண்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன்கள் சுமார் 1 சதவீதம் வரை மிதமாக அதிகரித்திருந்தாலும், பொதுக் கடன் குவிப்பில் குறிப்பிடத்தக்க மந்தநிலை இருந்தது.

## மீட்டெடுப்பிற்கும் அப்பாற்பட்ட முன்னேற்றம்

குறுகியகால பேரினப்பொருளாதார நிலைத்தன்மை மற்றும் கடன் தாங்கும்தன்மை தொடர்பில் எய்தப்பட்ட சாதனை என்பது செயல்முறையின் முதல் கட்டம் மட்டுமே ஆகும். மத்திய மற்றும் நீண்டகால பொருளாதார முன்னேற்றத்தை மீட்டெடுப்பதற்கு மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய காரணங்கள்:

- பொருளாதார திருப்பத்தை உறுதிப்படுத்தும் குறிகாட்டுகள் இருப்பினும், நெருக்கடியான இலங்கை பொருளாதாரம் இன்னும் ஆபத்தில் உள்ளது. வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியது, இது மேலும் மோசமடையக்கூடும்.

- அதற்கு அப்பால், பொருளாதார நிலைத்தன்மை நாட்டின் வளர்ச்சித் திறனை திறப்பதன் மூலம் நிலைக்க வைக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியுடன்தான் அரசு தனது நிதிசார் நிலைத்தன்மையை வருவாய் அதிகரிப்பின் மூலம் நிலைநிறுத்த முடியும்.

- ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடன் மறுசீரமைப்பின் மூலம் கடன் தாங்கும்தன்மையை மேம்படுத்தும் வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியூடாகவே கடன் தாங்கும்தன்மை பொருள்பட மேம்படுத்தப்பட வேண்டும்.

- ”மீட்டெடுப்பு'' என்பது பொருளாதார நெருக்கடிக்கு முந்தைய நிலையை தேசம் அடைவதாகக் குறிப்பிடப்படும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறது. இதனால் தேசம் விரும்பும் பொருளாதார செழுமை மற்றும் வாழ்க்கைத் தரத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவைப் பெறாது. இலங்கையின் முன்னேற்றத்தை உறுதி செய்ய, இது உயர் வருமானம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகம் கொண்ட 'வளர்ச்சியடைந்த நாடாக' மாற வேண்டும். பொருளாதார முன்னேற்றம் நீண்ட கால அடிப்படையில் நிலைத்திருக்க வேண்டும், இது நாட்டின் செழுமையை மற்றும் நிலையான முன்னேற்றத்தை அடைய உதவும் திறவுகோலாக இருக்கும்.

### “வர்த்தக“ துறையினூடாக தன்னிறைவான வளர்ச்சி

இலங்கையின் நெருக்கடிக்கு முந்தைய வளர்ச்சிச் செயன்முறை முறை தீவிரமாக மாற்றமடைய வேண்டும், “வர்த்தகம் அல்லாத“ துறையிலிருந்து ஏற்றுமதி உற்பத்தியை உருவாக்கும் “வர்த்தக“ துறைக்கு மாற வேண்டும்., இது ஏற்றுமதி உற்பத்தியை உருவாக்கும். வர்த்தகம் அல்லாத துறை உள்ளீடுகளால் ஆதரிக்கப்படும் வர்த்தகத் துறை வளர்ச்சியானது, தன்னிறைவான வளர்ச்சிக்கு தேவையான வேகத்தை நிறுவுவதற்கான நிபந்தனைகளை அமைக்கும்.2048ஆம் ஆண்டிற்குள் “உயர் வருவாய்“ நிலையை அடைவதற்கான அரசின் உத்தேச குறிக்கோள் சர்வதேச அனுபவத்தின் அடிப்படையில் யதார்த்தமற்றதல்ல. இது அடுத்த 20-25 ஆண்டுகளில் GDP வளர்ச்சியின் 7-8 சதவீத வருடாந்திர சராசரி விகிதத்தை பராமரிக்க வேண்டும். 2023 ஆம் ஆண்டின் வருமான மட்டங்களின்படி நாடுகளின் வகைப்பாட்டின் படி, உயர் வருமான வரம்பு தலா 14,005 அமெரிக்க டொலர்களாகும், அதேவேளை இலங்கையின் தற்போதைய தனிநபர் வருமான நிலை 3,706 அமெரிக்க டொலர்களாகும். இதன் விளைவாக, நாடு “குறைந்த-நடுத்தர-வருமானம்“ நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ஏற்றுமதி விரிவாக்கம் மற்றும் முதலீடு ஊக்குவிப்பு

தன்னிறைவான வளர்ச்சிக்கு ஏற்றுமதி சந்தைகளுக்கான உற்பத்தி தேவைப்படுகிறது.இது பில்லியன் கணக்கான வாடிக்கையாளர்கள் மற்றும் பல்வேறு வழங்குநர்களை கொண்ட உலகளாவிய போட்டி சந்தைகளாகும். ஆகவே, ஏற்றுமதி நடத்தப்படும் உற்பத்தி தொழிலின் விரிவாக்கத்துக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும், பொருளாதார அளவிற்கேற்ப பயன்கள் அளிக்கும் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கத்தை வழங்கும். ஏற்றுமதி சந்தைகளை இலக்காகக் கொண்ட வர்த்தகத் துறையிலிருந்து உற்பத்தியை அதிகரிக்க, உள்ளூர் தனியார் முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) ஆகிய இரண்டிலிருந்தும் துரிதப்படுத்தப்பட்ட தனியார் முதலீட்டு ஓட்டங்கள் தேவைப்படுகின்றன. அடுத்த 10-20 ஆண்டுகளுக்குள் அதன் தற்போதைய ஏற்றுமதி வருவாயான அமெரிக்க டொலர் 11.9 பில்லியன் (2023) இருந்து அமெரிக்க டொலர் 100 பில்லியனை இலக்காகப் அதிகரிப்பதில் நாடு கவனம் செலுத்த வேண்டும். அதிநவீன தொழில்நுட்பம், முகாமைத்துவ நடைமுறைகள், ஏற்றுமதி சந்தை அணுகல் மற்றும் விநியோகச் சங்கிலி இணைப்பு ஆகியவற்றுடன் வரும் FDIயை ஈர்க்காமல் இந்த லட்சிய ஏற்றுமதி வளர்ச்சி இலக்கை அடைய முடியாது. வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் இலங்கை மோசமான வரலாற்றுப் பதிவைக் கொண்டிருப்பதால், ஒரு சாதகமான வணிகச் சூழலை ஏற்படுத்துவதும், சீர்திருத்தங்களை மேற்கொள்வது மற்றும் தேவையான நிபந்தனைகளை கட்டமைப்பதன் மூலம் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைப் பெறுவதும் அவசியம்.

## ஏற்றுமதியை நோக்கிய கொள்கை சீர்திருத்தங்கள்.

இலங்கையின் கொள்கைச் சீர்திருத்தங்களின் எதிர்காலச் செல்திசையைத் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பதில், வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் எவ்வகைக் கொள்கைகள் பயன்பட்டன எவை தோல்வியடைந்தன என்பதைப் புரிந்து கொள்ள, இலங்கை தனது கடந்தகால அனுபவங்களிலிருந்து பாடங் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். ஒரு விரிவான சோசலிச அமைப்பிலிருந்து ஒரு பெரிய தாராளமயமாக்கல் சோதனை வரை, அனைத்து வர்த்தகக் கொள்கை நிர்வகிப்பு முறைகளையும் இலங்கை ஏற்கெனவே பரிசோதித்துள்ளது.

1977 இல் செயற்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் திட்டம், வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உருவான சீர்திருத்தங்கள், இலங்கையின் முதனிலைப் பண்ட உற்பத்தி மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஏற்றுமதிச் சந்தைக்கான உற்பத்திப் பொருட்களால் ஆதிக்கம் செலுத்தும் பொருளாதாரமாக மாற்ற உதவியது.

ஆனால், அச்சீர்திருத்தங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படத் தவறின, மேலும் 2000 களின் முற்பகுதியில் அவைதலைகீழாக மாற்றப்பட்டு, வர்த்தகத் துறையை பலவீனப்படுத்தியது. இத்தகைய அனுபவத்தின் அடிப்படையில், இறக்குமதி வர்த்தகம் மற்றும் உள்நாட்டு விற்பனைக்கான ஊக்குவிப்புகளுடன் கூடிய 'உள்நோக்கு-சார்ந்த' கொள்கை முறைமையிலிருந்து மீள்திரும்புவது ஒரு விலையுயர்ந்த முயற்சியாக இருக்கக்கூடும்.

நெருக்கடிக்குப் பிந்தைய காலத்தில் பின்பற்றப்பட்ட கொள்கைகள் இதனை மேலும் நிரூபிக்கின்றன. இந்த கொள்கைகள் வர்த்தகம் செய்யக்கூடிய உற்பத்தி மற்றும் ஏற்றுமதி விரிவாக்கத்திற்கு உகந்த கொள்கைகளாக அதாவது 'வெளிப்புறம் சார்ந்த' கொள்கையாக மாற்றப்பட வேண்டும். இக்கொள்கையானது உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுடன் ஒருங்கிணைக்க தேவையான அளவுத்திட்டச் சிக்கனங்களை உருவாக்கவும், பொருளாதாரத்தைத் திறந்து எளிதாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது. சர்வதேச வர்த்தகம்.

## வர்த்தக ஒப்பந்தங்கள்

ஒருதலைப்பட்ச வர்த்தகச் சீர்திருத்தம் நாட்டை ஏற்றுமதி சார்ந்த மற்றும் உலகளாவிய போட்டி பொருளாதாரமாக மாற்றுவதற்கான முதல் சிறந்த கொள்கைத் தெரிவாகும். இரண்டாவது சிறந்த தெரிவாக, தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பை ஊக்குவிக்கலாம், சந்தை அணுகல் தடைகளை நீக்கலாம் மற்றும் வினைதிறன் மேம்பாடு மற்றும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை எளிதாக்கலாம். இன்று, பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் பலதரப்பு வர்த்தக அமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளன. இதுவரை, இலங்கை இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர் மற்றும் சமீபத்தில் தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் நான்கு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை (FTAs) செய்து கொண்டுள்ளது. ஆசிய பசிபிக் வர்த்தக ஒப்பந்தம் (APTA) தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SAFTA) மற்றும் உலகளாவிய வரி விருப்பத்தேர்வு அமைப்பு (GSTP) போன்ற பல பிராந்திய வர்த்தக குழுக்களிலும் இலங்கை கையெழுத்திட்டுள்ளது. பல விரிவான பொருளாதார பங்காளித்துவ பேச்சுவார்த்தைகள் சீனா மற்றும் இந்தியாவுடன் ஒப்பந்தங்கள் ஊடாக (CEPA) நடந்து வருகின்றன. பரந்த ஆசிய நிரம்பல் சங்கிலிகளில் ஒருங்கிணைவதற்கான தளத்தை வழங்க இலங்கைக்கு குறிப்பிடத்தக்க வாய்ப்பாக விளங்கும் பிராந்திய விரிவான பொருளாதாரப் பங்காளித்துவத்தில் (RCEP) இணைவதற்கான விருப்பக் கடிதத்தையும் இலங்கை சமர்ப்பித்துள்ளது. RCEP உடன் இணைவதன் மூலம், உலகளாவிய சந்தைகளில் அதன் போட்டித்தன்மையை மேம்படுத்துவதன் மூலம், அளவுத்திட்ட மற்றும் நோக்கச் சிக்கனங்களை இலங்கை எய்த முடியும்.

இந்த வர்த்தக உடன்படிக்கைகள் நாட்டிற்கு பரஸ்பர அனுகூலங்களைக் கொண்டுள்ளதா என்பது குறித்து பல கவலைகள் உள்ளன. எனவே, ஒரு FTA களில் நுழைவதற்கு முன், வருங்கால வர்த்தக ஒப்பந்தங்களின் சாத்தியமான செலவுகள் மற்றும் நன்மைகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். கூட்டாளர் நாடுகளை கவனமாக தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானது, ஏனெனில் ஒப்பந்தத்தில் உள்ள தரப்பினரின் வர்த்தக முறைகளில் குறிப்பிடத்தக்க இணக்கத்தன்மை இல்லாத நிலையில் FTAகள் வர்த்தகத்தை ஊக்குவிக்காது. இறுதியாக, தாராள வர்த்தக உடன்படிக்கைகள் அல்லது ஒருதலைப்பட்ச தாராளமயமாக்கலின் விளைவு, சந்தை ஆரம்பத்தில் இருந்து லாபத்தை ஈட்ட வேண்டுமாயின் வணிக நிறுவனங்களின் திறனை மேம்படுத்த தேவையான நிரம்பல்பக்கச் சீர்தருத்தங்களும் அவசியமாகும்.

## வெளிப்படையான தீர்வைச்செலுத்தல் கொள்கை

தீர்வைச்செலுத்தல் கொள்கை, சந்தை அமைப்பில் வர்த்தக கொள்கையின் மையமாக, போட்டித் திறனுடன் கூடிய ஏற்றுமதி நோக்குடைய பொருளாதாரத்தை உருவாக்குவதில் முக்கிய பாத்திரம் வகிக்க முடியும். GATT/WTO ஒழுங்குமுறையின் கீழ், சட்டப்பூர்வ பாதுகாப்பிற்காகக் கிடைக்கும் உயர்வான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வர்த்தகக் கொள்கை கருவியாக தீர்வைகள் உள்ளன. நீண்டகால நோக்குடன் தீர்வைகளின் கட்டமைப்பை பரிசீலிப்பது அரசாங்கத்தின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். இது, உணர்திறன் வாய்ந்த தொழில்களைப் பாதுகாப்பதில் ஒரு நுட்பமான சமநிலையை உருவாக்குவதையும், அதிக பொருளாதார பல்வகைப்படுத்தல் மற்றும் வலுவான ஏற்றுமதி வளர்ச்சியை அடைய திறமையான வளப் பங்கீட்டை உறுதி செய்ய வேண்டும்.

பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுக்கு மாறாக, பொருளாதாரத்தை சிதைக்கும் இரண்டு அடுக்கு சுங்கவரி அட்டவணையை நடைமுறைப்படுத்தும் சிக்கலான தீர்வை முறைமை இலங்கையில் உள்ளது. வழக்கமான சுங்க வரிகளுக்கு மேலதிகமாக, நாடு பல்வேறு வரி திட்டங்களுடன் "பரா-தீர்வைகள்" எனப்படும் பல வரிகளையும் கட்டணங்களையும் விதிக்கின்றது. வரிவீதங்களை உயர்த்துவது அல்லது குறைப்பது போன்ற மாற்றங்களை இவை அடிக்கடி சந்திக்கின்றன, இதனால், இலங்கையின் சுங்கவரி முறைமையில் முன்கணிப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. நாட்டின் தீர்வைக் கட்டமைப்பானது ஒப்பீட்டளவில் குறைந்த அதிகூடிய முன்னுரிமைத் தேர்வு நாடு (MFN) தீர்வை

வீதம் சராசரியான 5.9% ஆக வகைப்படுத்தப்பட்டாலும், நிறையிடப்பட்ட வர்த்தக சராசரியான 5.4% (2022) உடன் ஒப்பிடுமிடத்து, இந்த குறைந்த MFN சராசரிகள் உண்மையான பாதுகாப்பின் அளவை மறைக்கின்றன. பொருளாதாரத்தில் ஏற்றுமதிக்கு எதிரான சார்புகளை உருவாக்கும் பரா-தீர்வைகளின் இரண்டாவது அடுக்குகள் இதற்கு உதவுகின்றன.

பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் (ERP) என்பது, MFN சுங்கத்தீர்வை போன்ற பெயரளவிலான பாதுகாப்பு வீதத்தை (NRP) விட சிறந்த அளவீடு ஆகும், இது உள்நாட்டுத் தொழில்கள் மற்றும் வர்த்தகச் சிதைவின் மீதான சுங்கத்தீர்வைக் கொள்கைகளின் தாக்கத்தை மதிப்பிடுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை, 1977 இல் பொருளாதார தாராளமயமாக்கலுக்குப் பிறகு பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் ஆரம்பத்தில் குறைவடைந்தது - 2000 களின் முற்பகுதியில் 137% உச்சத்தில் இருந்து 56% ஆகக் குறைந்தது. குடித்தொகைமதிப்பு மற்றும் புள்ளியியல் துறையின் (DCS) சமீபத்திய மதிப்பீடுகளின்படி, இந்த போக்கு சமீபத்தில் தலைகீழாக மாறிவிட்டது, பெரும்பாலான பாதுகாக்கப்பட்ட தொழில்களுக்கு அதிக ERPயை பதிவு செய்யப்படுகிறது. இறுதியாக, தீர்வை முறைமையின் சிக்கலானது வர்த்தக அமைப்பில் ஊழல் மற்றும் திறமையின்மைக்கு வழிவகுத்தது

